பக்கங்கள்: 11


# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 ஆவணி 28 வெள்ளிக்கிழமை 13.09.2024 கதிர் 310

**இது ரகசியம் அல்ல!**

தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பால் ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்தப்படுவதற்காகப் பரிசீலிக்கப்பட்ட பெயர்களில் இறுதிவரை வந்த பெயர்களில் ☞ 2






### சுகாதார கொள்கைகள் அறிவக ஆய்வு முடிவு

# வடக்கு, கிழக்கு மக்கள் சஜித்திற்கே பேராதரவு

### ஏனைய இடங்களில் அநுர முன்னிலையில்

2024 ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளர் சஜித் பிரேமதாசவிற்கே வடக்கு, கிழக்கு மக்கள் பேராதரவு வழங்குகின்றார்கள் என்று தேர்தலுக்கு முந்தைய கருத்துக்கணிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ☞ 2

## வேட்பாளர்களின் பாதுகாப்பு குறித்து பொலிஸார் கரிசனை

ஜனாதிபதி வேட்பாளர்கள் தங்கள் பாதுகாப்பில் கவனம் செலுத்துமாறும், கடுமையான அவதானத்துடன் செயற்படுமாறும் பொலிஸார் அறிவுறுத்தல் வழங்கியுள்ளனர்.

பிரதான வேட்பாளர்கள் கூடும் இடங்களில் பொலிஸார் பலத்த பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தபோதிலும், வேட்பாளர்கள் மேடைக்குள் நுழையும்போதும், வெளியேறும் போதும் ஆதரவாளர்களால் பாதுகாப்பின்மை நிலவுவது குறித்து சம்பந்தப்பட்டவர்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருளான இடங்களில் கூட்டங்களை நடத்துவதன் ☞ 8



## வாக்காளர் அட்டைகளை தபாலகங்களில் பெறலாம்

எதிர்வரும் 3 தினங்களில் வாக்காளர் அட்டை கிடைக்காவிட்டால் அதனை தபால் அலுவலகங்கள் ஊடாக பெற்றுக்கொள்ள முடியுமென உபதபால் மா அதிபர் ராஜித ரணசிங்க தெரிவித்துள்ளார்.

தமது ஆள் அடையாளத்தை உறுதி செய்து வாக்காளர் ☞ 8

## ஒக்டோபர் 26 எல்பிட்டிய தேர்தல்

எல்பிட்டிய உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்புமனுக்களை ஏற்றுக்கொள்வது நேற்றுடன் நிறைவடைந்ததை தொடர்ந்து தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 26 ஆம் திகதி தேர்தலை நடாத்த திட்டமிட்டுள்ளதாக காலி ☞ 8

## நாமலின் பரப்புரை கூட்டத்தில் எம்.பிக்கு சாவு அச்சுறுத்தல்

நாமல் ராஜபக்ச கலந்துகொண்ட தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றிக்கொண்டிருந்தமாத்தளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நாலக பண்டார கோட்டேகொடவுக்கு சாவு அச்சுறுத்தல் விடுத்து கூச்சலிட்ட நபர்களுக்கு எதிராக வில்கமுவ பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீ லங்கா பொது ஜன பெரமுனவில் போட்டியிடும் நாமல் ராஜபக்சவை ☞ 8

## ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம் தற்காலிகமாக மூடப்பட்டது

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தை தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது. அதன் வளாகத்திலிருந்து அனைத்து மாணவர்களையும் வெளியேறுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இரு மாணவர்கள் குழுக்கள் இடையே ஏற்பட்ட ☞ 2

## கஜேந்திரன் அணியிடமிருந்து துண்டுபிரசுரங்கள் பறிமுதல்

2024 ஜனாதிபதித் தேர்தலை புறக்கணிக்குமாறு கோரி தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியால் அச்சிடப்பட்ட துண்டுப்பிரசுரங்கள் நேற்றுப் பறிமுதல் செய்யப்பட்டன. துண்டுப்பிரசுரம் அச்சிடப்பட்ட அச்சகத்தின் பெயர் ☞ 8

## முதலீட்டாளர்கள் மத்தியில் அச்சம்

இலங்கையின் அரசியல் நிச்சயமற்ற தன்மையை அடிப்படையாகக் கொண்டு, இறையாண்மை முறிகளை கொள்வனவு செய்துள்ள முதலீட்டாளர்கள் அவற்றை விற்பனை செய்யும் நிலைமை உருவாகியுள்ளதாக உலகின் முன்னணி பொருளாதார செய்தி வழங்குநரான புளூம்பேர்க் (Bloomberg) இணையத்தளம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் காரணமாக நாட்டில் நிலவும் அரசியல் நிச்சயமற்ற தன்மையை ☞ 2

## சஜித்தை ஆதரிப்பதில் எந்த மாற்றமுமில்லை

### தமிழ் அரசுக் கட்சி செயலர் அறிவிப்பு

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸவை ஆதரிப்பதென மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தில் எவ்வித மாற்றமும் இல்லை எனவும், இதுகுறித்த அடுத்தகட்ட நடவடிக்கைகள் பற்றி செப்டெம்பர் 16 தேர்தல் குழு கூடி ஆராய்ந்து மக்களுக்கு அறிவிக்கும் எனவும் இலங்கைத் தமிழரசுக்கட்சியின் பொதுச்செயலாளர் ப.சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து ப.சத்தியலிங்கத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

2024 ஆம் ஆண்டு ஜனாதிபதித்தேர்தலில் சஜித் பிரேமதாஸவை ஆதரிப்பது தொடர்பான இலங்கைத் தமிழரசுக்கட்சியின் தீர்மானத்தில் எவ்வித மாற்றமும் இல்லை.

வவுனியாவில் கூடிய தேர்தல் தொடர்பான குழுவின் கூட்டத்தில் கட்சியின் தீர்மானத்தை ☞ 2

## புதிய கல்வி நிறுவனங்கள் நாட்டில் உருவாக்கப்படும்

### ரணில் விக்கிரமசிங்க அறிவிப்பு

இளைஞர் யுவதிகளுக்கு உலகளாவிய தரத்திற்கு ஏற்ப உயர்கல்வி வாய்ப்புக்களைப் பெறும் சந்தர்ப்பத்தை வழங்கும் வகையில் அரச மற்றும் தனியார் துறையில் பல புதிய கல்வி நிறுவனங்கள் நாட்டில் உருவாக்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

கொழும்பு காலிமுகத்திடல் ஹோட்டலில் நேற்று இடம்பெற்ற உயர் கல்விக்கான பாடசாலைத் திறப்பு விழா நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி ☞ 8

## எப்படியெல்லாம் அரசு செலவைக் குறைக்கிறது!

இவ்வருடம் கல்வியற் கல்லூரி மாணவர்களை இணையவழி ஊடாக ஆட்சேர்ப்பு செய்ததன் மூலம் ஆளும் தரப்புக்கு சுமார் பத்து மில்லியன் ரூபா சேமிக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

கல்வி அமைச்சில் இடம்பெற்ற ☞ 2

## இனி இது .....

ஒன்று சந்திரநேரு சந்திரகாந்தன். கடைசியாக, அரியநேத்திரன், தவராசா மற்றும் இவரின் பெயர்களே தெரிவுக்காகப் பரிசீலிக்கப்பட்டன. அதிலும் தமிழ் மக்கள் கூட்டணிக் கட்சியின் தலைவர் விக்னேஸ்வரன் இவரைப் பெரிதும் விரும்பினார். பொது வேட்பாளராக அவரை நிறுத்தும்படி பொதுக் கட்டமைப்பினரை அவர் வருந்திக் கேட்டிருந்தார்.

ஆனால், ஒற்றுமை ஒற்றுமை என்று கூறிக்கொண்டு கட்சிகளுக்குள் இருந்த ஒற்றுமையையும் சீர்குலைப்பதையே குறிக்கோளாகக் கொண்டிருந்த பொதுக் கட்டமைப்பினர் இறுதியில் தமிழ் அரசுக் கட்சியின் மத்திய குழு உறுப்பினர் அரியநேத்திரனை வேட்பாளராகத் தெரிவு செய்தனர். நல்லவேளை, குறிக்கோளில் குறியாக இருந்ததனால் அவர்களின் தலை தப்பியது. ஏனெனில் அவர்களால் பொது வேட்பாளருக்காக இறுதிவரை பரிசீலிக்கப்பட்டவரான சந்திரகாந்தன் சந்திரநேரு நேற்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு தெரிவித்து அவரது மேடையில் ஏறியிருந்தார். அம்பாறையில் நடந்த கூட்டத்தில்தான் இந்தக் கண்கொள்ளாக் காட்சி அரங்கேறியது.

தன்னைப் பொது வேட்பாளராகத் தெரிவுசெய்தால், பொதுக் கட்டமைப்பினர் சொல்கிறபடியெல்லாம் ஆடமுடியாது, குறிப்பாக தமிழ்த் தேசியம் என்று கூறிக்கொண்டு வேட்டிசட்டையெல்லாம் போடமுடியாது, தான் தானாகவே இருப்பேன் என்று சந்திரகாந்தன் தன்னெழுச்சி காட்டப்போகவே, இவரை நம்மால் கையாள்வது முடியாத காரியம் என்று பொதுக் கட்டமைப்பினர் மெல்ல ஒ-துங்கியிருந்தனர்.

சந்திரகாந்தன் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரநேருவின் மகன். அப்பாவின் மறைவுக்குப் பின்னர் அம்பாறை மாவட்டத்திற்கான நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தவர். சந்திரநேரு விடுதலைப் புலிகள் இயக்கத்தால் மாமனிதராக அறிவிக்கப்பட்ட ஒரு தமிழ் இனப்பற்றாளர். போர் நடைபெற்றுக்கொண்டிருந்த நாள்களிலேயே கிழக்கில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் புலிகளுக்கு ஆதரவான நிலைப்பாட்டை வெளிப்படுத்திவந்தவர். அதனால்தான் தமிழ்க் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டபோது அவர் அம்பாறை மாவட்டத்தில் போட்டியிடுவதற்கு வாய்ப்பளிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மட்டு. அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யனுடன் வாகனத்தில் பயணித்துக்கொண்டிருந்தபோது நடத்தப்பட்ட கிளைமோர் தாக்குதலில் இருவரும் கொல்லப்பட்டிருந்தனர். கிழக்கில் அப்போது கருணாவின் பிளவால் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்குள்ளேயே மாறி மாறி தாக்குதல்கள் இடம்பெற்றுக்கொண்டிருந்தது. கருணாவோடு இருந்தவர்களான பிள்ளையான் மற்றும் இனியபாரதி ஆகியோரே கிளைமோர் தாக்குதல் நடத்தி கௌசல்யன் மற்றும் சந்திரநேருவைக் கொன்றார்கள் என்கிற குற்றச்சாட்டு இப்போதும் அப்படியே இருக்கின்றது.

அப்படி அப்பாவின் கொலையில் சந்தேகநபர்களான இருவரில் முதன்மையானவரான பிள்ளையானோடுதான் ஒரே மேடையில் ரணில் விக்கிரமசிங்கவோடு நேற்று அமர்ந்திருந்தார் சந்திரகாந்தன். இந்தக் காட்சியைப் பார்த்த பலரும் அதிர்ச்சியடைந்தனர். தனது தந்தையின் கொலைக்குக் காரணமானவர்கள் என்று குற்றஞ்சாட்டப்பட்டவர்களுடன் சந்திரகாந்தனின் ஊடாட்டம் அவர்களுக்குச் சகிக்க முடியாததாக இருந்தது. இப்படிப்பட்ட ஒருவரையா பொது வேட்பாளராக நிறுத்த முற்பட்டனர் என்று அங்கலாய்த்துக்கொண்டனர்.

அரசியலில் அண்ணன் என்னடா தம்பி என்னடா அப்பன்தான் என்னடா என்று பாடிவிட்டு நடிகர் கவுண்டமணி பாணியில் "அரசியலில் இதெல்லாம் சாதாரணமப்பா" எனக் கடந்து செல்வதைத் தவிர வேறென்ன செய்வது?

..........................

அடுத்துவரும் நாள்களில் கிழக்கில் தன்னை வைத்துச் செய்வார்களோ என்று அரியத்தாருக்கு அச்சம் பிடித்துக்கொண்டுள்ளது. நேற்றுச் செய்தியாளர்களைச் சந்தித்து, தனக்கு எதிராக இன்னும் சில தினங்களில் அல்லது தேர்தலுக்கு முதல் நாளில் தன்னைப் பற்றித் துண்டறிக்கைகள் வெளியிடப்படலாம் என்றிருக்கிறார்.

தான் தேர்தலில் இருந்து ஒதுங்கிவிட்டேன் என்று கூட துண்டறிக்கைகள், காணொளிகள் வெளியிடக்கூடும் என்றும் அவைஎவற்றையும் தமிழ் மக்கள் நம்ப வேண்டாம் என்றும் கேட்டுக்கொண்டுள்ளார். இதை யார் செய்யப்போகிறார்கள் என்று அவர் தெளிவுபடுத்தவில்லை. சொந்த மாவட்டத்தில் உள்ள மற்றைய அரசியல் கட்சிகளா அல்லது பொதுக் கட்டமைப்புக்குள்ளேயே இருக்கும் கட்சிகளா இவ்வாறு செய்யப்போகின்றன என்பதை அவர் தெளிவுபடுத்தவில்லை.

இருந்தாலும், தமிழ் மக்கள் குழப்பமடையத் தேவையில்லை என்றும் விருப்பு வாக்கு, விருப்பத் தேர்வு என்கின்ற விடயத்தில் பலர் மக்களை குழப்பமடையச் செய்து வந்தாலும் மக்கள் சங்குக்கு மட்டும் புள்ளடியிட்டால் போதும் என்று கேட்டிருக்கிறார். சங்குக்குப் போட்டாலும் இரண்டாவது விருப்பத் தெரிவை ரணில் விக்கிரமசிங்கவுக்கு வழங்கினால் நல்லது என்று ரெலோவின் செயலாளர் ஜனா எனப்படும் நாடாளுமன்ற உறுப்பினர் கருணாகரம் ஓரிரு தினங்களுக்கு முன்னர்தான் தெரிவித்திருந்தார். அதை மனத்தில் வைத்துத்தான் அரியத்தார் இப்படியெல்லாம் கதைத்தாரோ தெரியாது. எல்லாம் அவரே அறிவார்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## வடக்கு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தக் கருத்துக்கணிப்பின்படி இலங்கையின் ஏனைய பகுதிகளில் தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர் அநுரகுமார திஸநாயக்க அதிக ஆதரவைப் பெற்றுள்ளார். இருந்தபோதும் வடக்கு கிழக்கில் மக்களின் பேராதரவு சஜித் பிரேமதாஸவிற்கே கிடைத்துள்ளது.

இலங்கையின் சிறுபான்மைச் சமூகத்தினர் மத்தியிலும் சஜித் பிரேமதாஸவிற்கே அதிகளவு ஆதரவு உள்ளமையும் இந்தக் கருத்துக்கணிப்பின் மூலம் தெரியவந்துள்ளது.

சுகாதார கொள்கைகள் அறிவகம் ஓகஸ்ட் மாதம் மேற்கொண்ட கருத்துக்கணிப்பு இந்த முடிவுகளைத் தந்துள்ளது. அதன்படி அநுர மற்றும் சஜித் பிரேமதாச ஆகியோர் தொடர்ந்து முன்னிலையில் இருந்தாலும் ரணில் விக்கிரமசிங்க சீரான முன்னேற்றத்தைக் காட்டிவருகின்றார்.

இலங்கையில் உள்ள இலங்கைத் தமிழர்களில் 55 வீதமானவர்களும், இந்திய வம்சாவளித் தமிழர்களில் 53 வீதமானவர்களும் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவை வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை, முஸ்லிம்களில் 71 வீதமானவர்கள் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவை வெளியிட்டுள்ளனர். 60 வயதுக்கும் மேற்பட்ட வாக்காளர்களில் 43 வீதமானவர்கள் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவை வெளியிட்டுள்ளனர்.

வடக்கில் 55 சதவீதமானவர்கள் சஜித் பிரேமதாசவுக்கும் 33 சதவீதமானவர்கள் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் 10 சதவீதமானவர்கள் அநுரகுமார திஸநாயக்கவுக்கும் ஒரு சதவீதமானவர்கள் நாமல் ராஜபக்சவுக்கும் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

கிழக்கில் 71 சதவீதமானவர்கள் சஜித்திற்கும் 12 சதவீதமானவர்கள் ரணிலுக்கும் 13 சதவீதமானவர்கள் அநுரவுக்கும் 4 சதவீதமானவர்கள் நாமலுக்கும் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

மேற்கு (37%), மத்தி (41%), தெற்கு (52%), ஊவா (46%), சப்ரகமுவ (41%) ஆகிய மாகாணங்களில் தேசிய மக்கள் சக்தி வேட்பாளர் அநுரகுமார திஸநாயக்க முன்னிலை பெற்றுள்ளார். வடமேற்கு (36%), வடமத்தி (35%) ஆகிய மாகாணங்களில் ரணில் விக்கிரமசிங்க முன்னிலை பெற்றுள்ளார்.

மாகாண வாக்காளர்கள் வேட்பாளர் ஒருவருக்குப் பேராதரவு வழங்குவது வடக்கு, கிழக்கில் மட்டுமே நிகழ்ந்துள்ளது. இந்த இரு மாகாணங்களையும் தவிர்த்து தெற்கு மாகாணத்தில் மட்டுமே வாக்காளர்கள் 5-0 சதவீதத்திற்கு அதிகமாக ஒரு வேட்பாளருக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர்.

## முதலீட்டாளர்கள் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கருத்திற்கொண்டு இலங்கை தொடர்பில் தமது பங்களிப்பை குறைப்பதற்கு முதலீட்டாளர்கள் தீர்மானித்துள்ளதாக அந்த செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

புளூம்பேர்க் இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ளமைக்கு அமைய 2030 ஆம் ஆண்டில் முதிர்ச்சியடையவுள்ள இறையாண்மை முறிகளின் மதிப்பு தற்போது டொலருக்கு நிகராக 3 சதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது.

இது பெப்ரவரி மாதத்தில் இருந்து இதுவரையான காலப்பகுதிக்குள் ஏற்பட்ட பெரும் வீழ்ச்சியாகும்.

சந்தை மீதான அழுத்தம் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பிருந்தே அதிகரித்துள்ளதாக சுட்டிக்காட்டியுள்ள புளூம்பேர்க் இணையத் தளம், கடன் மறுசீரமைப்பு பேச்சுக்களுக்கு நாட்டின் தலைமைத்துவம் மாறுவதன் மூலம் தாக்கம் ஏற்படலாம் என முதலீட்டாளர்கள் மத்தியில் சந்தேகம் எழுந்துள்ளதாகத் தெரிவித்துள்ளது.

இலங்கை சர்வதேச நாணய நிதியத்துடன் ஏற்படுத்திக்கொண்டுள்ள வேலைத்திட்டத்தை மீளாய்வு செய்வதற்கோ அல்லது மீண்டும் கலந்துரையாடுவதற்கோ எதிர்பார்த்துள்ளதாக நாட்டின் எதிர்க்கட்சித் தலைவர்கள் அறிவித்துள்ளமை இதற்கான காரணமாகும்.

தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சர்வதேச நாணய நிதிய திட்டத்தின் கீழ் மேற்கொண்ட நடவடிக்கைகளால் அவரது ஜனரஞ்சகத்தன்மை குறைவடைந்துள்ளதாகவும் தேசிய மக்கள் சக்தியின் அநுரகுமார திசாநாயக்க அவரது பிரதான சவாலாக மாறியுள்ளார் எனவும் புளூம்பேர்க் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பலதரப்பு கடன் வழங்குநர்களுடன் இணக்கம் காணப்பட்ட கடன் மறுசீரமைப்பு வரைபையும் தேசிய மக்கள் சக்தி எதிர்ப்பதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

லண்டனில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள எம்.என்ட்.ஜி இறையாண்மை முறிகள் தொடர்பிலான நிபுணத்துவ நிறுவனத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவரை மேற்கோள்காட்டி இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் தேர்தல் தொடர்பில் எழுந்துள்ள ஸ்திரமற்ற நிலை கடன் மறுசீரமைப்பு கால எல்லை தொடர்பிலான உறுதியற்ற நிலையால் இலங்கையின் இறையாண்மை முறிகள் வலுவற்றதாகியுள்ளதாக குறித்த அதிகாரி புளூம்பேர்க் இணையத்தளத்திற்கு தெரிவித்துள்ளார்.

ஏதேனும் ஒரு வகையில் தேசிய மக்கள் சக்தி வெற்றியீட்டினால் தற்போது சந்தையில் எதிர்பார்க்கப்படுகின்ற கால எல்லை மேலும் நீடிக்கலாம் எனவும் குறித்த அதிகாரி சுட்டிக்காட்டியுள்ளார்.

# தேர்தலின் பின்பே 3ஆவது மீளாய்வு

## சர்வதேச நாணய நிதியம் அறிவிப்பு

இலங்கையில் நடைபெறவுள்ள தேர்தலின் முடிவுகளை மக்களே தீர்மானிக்க வேண்டும் என்றும் மூன்றாவது மீளாய்வுக்கான நேரம் தேர்தலுக்குப் பின்னர் அரசாங்கத்துடன் கலந்துரையாடப்படும் என்றும் சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் ஊடகப் பேச்சாளர் ஜூலி கோசாக், இலங்கையின் ஜனாதிபதி தேர்தல் மற்றும் மூன்றாவது மீளாய்வுதவணைக் கொடுப்பனவு தொடர்பில் கருத்துவெளியிடும்போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்று புதிய ஆளும் தரப்பு அதிகாரத்திற்கு வரவுள்ளது. இலங்கை மக்களின் விருப்பத்தின் அடிப்படையில் நாங்கள் வேலைத்திட்ட கலந்துரையாடல்களை முன்னெடுப்போம்.

இலங்கை வரலாற்றில் மிக மோசமான நெருக்கடியில் இருந்து மீண்டு வருவதற்கான வாய்ப்பை வழங்குவதற்கு வேலைத் திட்டங்களின் நோக்கங்களை அடைவது ஒரு முக்கியமான விடயமாகும்.

இலங்கையில் பல முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன, ஆனால் நாடு இன்னும் நெருக்கடியான சூழலில் இருந்து முழுமையாக மீளவில்லை. இதுவரையில் நாடு முகங்கொடுத்துள்ள கடினமாக வென்ற வெற்றிகளைப் பாதுகாப்பது இலங்கைக்கு முக்கியமானது.

இலங்கையின் தற்போதைய கடன் மறுசீரமைப்பு செயல்முறை பற்றிப் பார்க்கையில் சர்வதேச நாணய நிதியத்தின் குழு கொழும்புக்கு விஜயம் செய்தது. உத்தியோகபூர்வ கடன் வழங்குநர் குழு மற்றும் சீனாவின் எக்ஸிம் வங்கியுடனான ஒப்பந்தங்களுடன் உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு உள்ளிட்ட முக்கிய மைல்கற்களை அவதானித்தது.

கடன் மறுசீரமைப்பு செயல்முறையில் சர்வதேச நணய நிதியத்தின் பங்கு ஒட்டுமொத்த கடன் நிலைத்தன்மை மதிப்பீட்டை வழங்குவதற்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அதேநேரத்தில் இலங்கைக்கும் அதன் கடனாளிகளுக்கும் இடையில் பேச்சுவார்த்தைகள் தொடர்ந்த வண்ணமுள்ளன.

ஜனாதிபதித் தேர்தலைத் தொடர்ந்து சர்வதேச நாணய நிதியத்தின் திட்டத்தை மறுபரிசீலனை செய்வது குறித்து எதிர்க்கட்சிகள் வெளியிடும் கருத்துக்கள் தொடர்பில் சர்வதேச நாணய நிதியத்தின் நிலைப்பாட்டை வெளிப்படுத்தியவர் வரவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் இலங்கை மக்கள் முடிவு செய்ய வேண்டும். நாம் மக்களின் விருப்புக்கு மாறாக செயற்படப்போவதில்லை

சர்வதேச நாணய நிதியத்தினைப் பொறுத்தவரையில் முன்னேற்றகரமான வேலைத்திட்டமொன்றை கண்டுள்ள நாடு அதன் மோசமான நெருக்கடிகளில் இருந்து முழுமையாக வெளிவருவதற்கு அடைவுமட்டங்களைப் பாதுகாப்பது முக்கியம் என்றார்.

## சஜித்தை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடைமுறைப்படுத்துவது குறித்தும், சஜித் பிரேமதாஸவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்ட தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளைக் காலதாமதமின்றி நடைமுறைப்படுத்துவதற்கான ஒழுங்குகள் குறித்தும் அவருடன் கலந்துரையாடித் தீர்மானிப்பது எனவும் முடிவு எடுக்கப்பட்டது.

அத்துடன் எதிர்வரும் 16 ஆம் திகதி மீண்டும் கூடும் தேர்தல் குழு இவ்விடயங்கள் தொடர்பில் முன்னேற்ற மீளாய்வைச் செய்து, அதுபற்றி மக்களுக்கு அறிவிக்கும் என அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## எப்படியெல்லாம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலந்துரையாடலின் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார். அவர் தொடர்ந்தும் தெரிவித்ததாவது:

கல்வியற் கல்லூரி மாணவர்களை ஆட்சேர்ப்பதற்காக இதற்கு முன்னர் 13.5 மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. இம்முறை அதற்காக 3.5 மில்லியன் ரூபாய் மட்டுமே செலவிடப்பட்டது. இதனால் அரசுக்கு 10 மில்லியன் ரூபாவை சேமிக்க முடிந்துள்ளது.

பயிலுனர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு இதற்கு முன்னர், ஒன்றரை முதல் இரண்டு வருடங்கள் வரை எடுத்தன. இம்முறை 4 மாதங்களில், மிகக் குறுகிய காலத்தில் ஆட்சேர்ப்பை வினைத்திறனுடன் மேற்கொள்ள முடிந்துள்ளது.

அமைச்சரவை மற்றும் சட்டமா அதிபரின் அனுமதியுடன் இந்தப் பணிக்கான முழு தொழில்நுட்ப ஆதரவையும் இன்போர்மட்டிக் தகவல் தொழில்நுட்ப நிறுவனம் வழங்கியுள்ளது.

19 கல்வியற் கல்லூரிகளையும் இணைத்து கல்வித்துறைப் பல்கலைக்கழகம் ஒன்றை அமைப்பதற்கான இறுதி வரைவு சட்டமா அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது, அடுத்த வாரத்தில் அதற்கான தீர்வு கிடைக்கும். பின்னர், அது தொடர்பான விடயம் அமைச்சரவைக்கு அனுப்பி வைக்கப்படும் என்றார்.

## ஜயவர்த்தனபுர....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மோதலைத் தொடர்ந்து இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

அனைத்து மாணவர்களும் நேற்று மாலை 6 மணிக்கு முன்னர் பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேற வேண்டுமென ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் பத்மலால் எம் மானகே பிற்பகலில் அறிவித்திருந்தார்.

விடுதிகளில் தங்கியுள்ள மாணவர்களுக்கும் இந்த அறிவிப்புப் பொருந்தும் என்றும் அவர் தெரிவித்திருந்தார். இந்த அறிவுறுத்தலை மீறி பல்கலைக்கழக வளாகத்தில் இருக்கும் மாணவர்கள் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# இலங்கையின் பொருளாதாரத்தை நிலைப்படுத்த அனைத்துத் துறையினரும் அணையவேண்டும்

## பாரத் அருள்சாமி தெரிவிப்பு





(கிஷாந்தன்)

மலையக மறுமலர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு அமைச்சர் ஜீவன் தொண்டமானால் முன்வைக்கப்பட்ட மலையக சாசனத்துக்கு அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது. இத்திட்டம் அமுலுக்கு வந்த பிறகு எமது சமூகம் நிச்சயம் மாற்றத்தை நோக்கி நகரும் - என்று இ.தொ.காவின் உப தலைவரும், பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் தலைவருமான பாரத் அருள்சாமி தெரிவித்தார்.

நாட்டினதும், நமதும் வளமான எதிர்காலத்துக்காக பொருளாதார ஸ்தீரத்தன்மை ஏற்படுத்துவது தொடர் பிலான விசேட கலந்துரை யாடலொன்று பாரத் அருள்சாமியின் ஏற்பாட்டில் கண்டி குயின்ஸ் விருந்தகத் தில் நடைபெற்றது.

தொண்டமான் விளக்க மளித்துள்ளார். அத்துடன், ஜனாதிபதியின் பொருளாதார வேலைத்திட்டம் பற்றியும் அவர் எடுத்துரைத்தார்.

அதேவேளை மலையக சாசனத்தின் ஊடாக ஏற்படுத்தப்படவுள்ள மாற்றம் உள்ளிட்ட விடயங்கள் சம்பந்தமாகவும்



கண்டி வர்த்தக சமூகத்துடன் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் இ.தொ.காவின் பொதுச்செயலாளரும், அமைச்சருமானஜீவன்தொண்டமான் பிரதம அதிதியாகப் பங்கேற்றிருந்தார். முதலீட்டு ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுமகவும் கலந்துகொண்டார்.

வங்குரோத்து நிலையில் இருந்த எமது நாட்டு பொருளாதாரத்தை ஜனாதிபதி மீட்டுள்ள நிலையில், இலங்கையின் பொருளாதாரத்த ஸ்தீரப்படுத்துவதற்கு வர்த்தக பிரமுகர்கள், உள்நாட்டு உற்பத்தியாளர்கள் மற்றும் கைத்தொழில் பேட்டை உரிமையாளர்கள் உள்ளிட்டோர் ஒன்றிணைய வேண்டும் என இதன்போது அழைப்புவிடுக்கப்பட்டது.

நாட்டின் மொத்த தேசிய உற்பத்திக்கும், ஏற்றுமதிக்கும் பங்களிக்கும் வர்த்தக பிரமுகர்கள் எதற்காக ஜனாதிபதி ரணிலுக்கு வாக்க ளிக்க வேண்டும் என்பது தொடர்பில் அமைச்சர் ஜீவன் வர்த்தக சமூகத்துக்கு அமைச்சர் ஜீவன் தொண்டமான் விளக்கமளித்தார்.

அதேபோல அரசாங்கத்தின் வரிக்கொள்கைகள் மற்றும் முதலீட்டு வாய்ப்புகள் தொடர்பில் இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம விவரித் துள்ளார்.

தமது நன்றியுரையின்போது, அழைப்பையேற்று கூட்டத்தில் பங்கேற் றிருந்த வர்த்தகர்கள், உற்பத்தியாளர்கள், கைத்தொழில்பேட்டைஉரிமையாளர்கள் மற்றும் பொருளாதார நிபுணர்களுக்கு பாரத் அருள்சாமி நன்றிகளைத் தெரிவித்தார்.

அத்துடன், இக்கூட்டத்தை வெற்றிகரமாக உறுதுணையாக இருந்தவர்களுக்கும், தமிழ் வர்த்தக சங்க தலைவர், செயலாளர் உள்ளிட்ட அங்கத்தவர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்தார்.

கண்டியில் வர்த்தக துறை மட்டுமல்ல எல்லாதுறைகளையும்மேம்படுத்துவதற்கு இணைந்து பயணிப்போம் என இதன்போது பாரத் அருள்சாமி அழைப்பு விடுத்தார்.(05)

# சஜித்பிரேமதாஸவை ஆதரித்து கிளிநொச்சியில் பிரசாரகூட்டம்







சஜீத் பிரேமதாஸவை ஆதரித்து கிளிநொச்சி 155 ஆம் கட்டை சந்தியில் தேர்த்தல் பிரசாரக்கூட்டம் நேற்று நண்பகல் நடைபெற்றது.

குறித்த தேர்தல் பிரசாரகூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினரும் பேராசிரியருமானஜீ.எல்பீரீஸ், ஐக்கிய மக்கள்சக்தியின் பிரதிச்செயலாளரும் வடமாகாண இணைப்பாளருமான உமாச்சந்திரா பிரகாஸ், கட்சியின் மாவட்ட பிரதான அமைப்பாளர் மரிய சீலன், முன்னாள் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு சிவில் பாதுகாப்பு திணைக்கள கட்டளை அதிகாரி ரட்ணப்பிரிய பந்து உள்ளிட்ட கட்சி ஆதரவாளர்கள் மக்கள் கலந்து கொண்டனர். (05 - 113)

# பிரஜைகளின் தேர்தல் விஞ்ஞாபனத்தை பகிர்ந்து கொள்ளல் தொடர்பான நிகழ்வு

(ஹஸ்பர் ஏ.எச்)

பிரஜைகளின் தேர்தல் விஞ்ஞாப னத்தை பகிர்ந்து கொள்ளல் தொடர்பான நிகழ்வொன்று திருகோணமலை நகர சபை மண்டபத்தில் புதன்கிழமை இடம் பெற்றது.

மேற்படி நிகழ்வை கிழக்கு சமூக அபிவிருத்தி மையம் ஏற்பாடு செய்திருந்தது.

உள்ளடக்கிய ஆட்சிக்கான குடிமக்களின் குரல் மற்றும் முன் முயற்சி திட்டத்தின் கீழ் பிரஜைகளின் தேர்தல் விஞ்ஞாபனத்தை பகிர்ந்து கொள்ளல் நிகழ்வு இடம் பெற்றுள்ளது.

மையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் புஹாரி முஹம்மட் தலைமையில் இடம் பெற்ற இந்த நிகழ்வில் சிவில் சமூக செயற்பாட் டாளர்கள், கிராமமட்ட அமைப்புக்களின் தலைவர்கள் , இளைஞர், யுவதிகள், பல்கலைக்கழக மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.(05)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

தொலைபேசி - 021 222 3000

மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com

இணையம் - onlinekathir.com


## தேர்தல் வன்முறை அச்சம்

2024 அரசுத் தலைவர் தேர்தல் வெற்றி யாருக்கு என்பது இன்னும் நிச்சயமில்லை. இரண்டாவது விருப்பத் தெரிவு மூலம் தெரிவு செய்யப்படும் முதலாவது அரசுத் தலைவராக இம்முறை தெரிவாகுபவர் இருப்பார் என்று கருத்துக்கணிப்புக்கள் கூறுகின்றன.

சுகாதாரக் கொள்கைகள் அறிவகம் தனது ஒகஸ்ட் மாத கருத்துக்கணிப்பில் சஜித் பிரேமதாச, அநுரகுமார திஸநாயக்க, ரணில் விக்கிரமசிங்க ஆகியோருக்கு இடையில் போட்டிகடுமையானதாக காணப்படுவதை வெளிப்படுத்தியுள்ளது, எந்த வேட்பாளரும் அரைவாசி வாக்குகளை கூட பெறமாட்டார்கள் என அறிவகத்தின் நிறைவேற்றுப்பணிப்பாளர் கலாநிதி ரவி ரண்ணன் எலிய தெரிவித்துள்ளார்.

இந்தக் கருத்துகணிப்பு எந்த வேட்பாளரும் பெரும்பான்மையானவாக்காளர்களின்மனதைகவராததை புலப்படுத்தியுள்ளது என தெரிவித்துள்ள அவர் 2024ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலே இரண்டாவது மூன்றாவது விருப்பு வாக்குகளின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும் இலங்கையின் முதலாவது அரசுத் தலைவர் தேர்தலாக அமையலாம் என தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு வாக்கும் அதன் முக்கியத்துவத்தை பெறுவதற்காக வாக்காளர்களிற்கு அறிவுறுத்தும் செயற்பாடுகளில் தேர்தல்கள் ஆணைக்குழுவும் சிவில் சமூகமும் ஈடுபடவேண்டும் என அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வெற்றியாளர் யார் என்பது நிச்சயமற்ற இந்த நிலையைப் பயன்படுத்தி தேர்தலுக்குப் பின்பான வன்முறைகள் இடம்பெறலாம்என்கிறஅச்சம், பதற்றம்ஏற்பட்டுவருவதையும் அவதானிக்க முடிகின்றது. தேர்தலில் தேசிய மக்கள் சக்தி வெற்றிபெற்றால் மற்றைய கட்சிகளின் ஆதரவாளர்களைத் தாக்க அவர்கள் வன்முறையைக் கையில் எடுப்பார்கள் என்று ஆளும் தரப்பினர் குற்றஞ்சாட்டுகின்றனர். அதற்கு மறுதலையாக தேசிய மக்கள் சக்தியின் ஆதரவாளர்கள் என்ற போர்வையில் ஏனைய அரசியல் கட்சிகளை சேர்ந்தவர்கள்வன்முறைகளில்ஈடுபடலாம்எனஜேவிபியின் பொதுச்செயலாளர் டில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

“செப்டம்பர் 18 தேர்தல் பரப்புரைகள் முடிவடைந்ததும் ஏனைய கட்சிகளின் ஆதரவாளர்கள் வன்முறைகளில் ஈடுபடுவார்கள் அதில் சந்தேகமில்லை. தேசிய மக்கள் சக்தியின்ஆதரவாளர்களேவன்முறைகளில்ஈடுபடுகின்றனர் என காண்பிக்க முயல்வார்கள்” எனவும் டில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

பிரதான கட்சிகள் தங்கள் தேர்தல் மேடைகளில் தேசியமக்கள் சக்தி வன்முறையில் ஈடுபடும் என தொடர்ந்து தெரிவித்து வருகின்றனர், தேசிய மக்கள் சக்தியின் ஆதரவாளர்கள் வன்முறைகளில் ஈடுபடுகின்றனர் என காண்பி;ப்பதற்காக இந்த அரசியல்வாதிகள் வன்முறைகளில் ஈடுபடக்கூடும் என்பது குறித்து எந்த சந்தேகமும் இல்லை என்கிறார் அவர்.

ஆக மொத்தத்தில் தேர்தலையொட்டியும் தேர்தலின் பின்னரும் வன்முறைகள் வெடிப்பதற்கான சாத்தியங்கள் குறித்தே எல்லோரும் பேசுகின்றனர் என்பது அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. தேர்தல் வாக்களிப்பின் போதும் அதற்கு முன்னரும் பின்னரும்கூட வன்முறைகள் இல்லாதிருப்பதை உறுதிப்படுத்தவேண்டிய பெரும் பொறுப்பு ஆளும்தரப்புக்கு உண்டு. அதிலிருந்து ஆட்சியாளர்கள் விலகமுடியாது. தேர்தலில் தோல்வியை ஏற்கமுடியாமல் ஆளும்தரப்பினரே வன்முறையைத் தூண்டிவிடக்கூடும் என்கிற அச்ச நிலை ஏற்படுவது கேவலமானது. அத்தகைய ஒரு நிலை தடுத்து நிறுத்தப்படவேண்டியது.

ஏற்கனவே கோட்டாபயவை ஆட்சி அதிகாரத்தில் இருத்துவதற்காகத்தான்உயிர்த்தஞாயிறுகுண்டுவெடிப்புக்கள் நிகழ்த்தப்பட்ட என்கிற குற்றச்சாட்டு இருக்கின்ற நிலையில் தற்போதைய சூழ்நிலையின் பாரத்தூரத் தன்மை குறித்து விரிவாக ஆய்வு செய்யப்படுவது அவசியம். அத்தோடு அதனைத் தடுப்பதற்கான முன்னேற்பாட்டு நடவடிக்கைகள் ஆளும் தரப்பாலும் தேர்தல் ஆணைக்குழுவாலும் எடுக்கப்படவேண்டியதும் அவசியம்.

# மாற்றம் ஒன்றே மாறாதது

**என். சத்திய மூர்த்தி**

சும்மாசொல்லக்கூடாது. தற்போதையநிலையில், தமிழ் அரசு கட்சி என்ற அமைப்பு இருக்கிறதா, இல்லையா என்பதே கேள்விகுறியாகி வருகிறது. உள்வீட்டுஉள்குத்துகளை வைத்து நோக்கும்போது, அது இருந்தால் என்ன, அல்லது இல்லாமல் போனால் என்ன, என்ற எண்ணவோட்டத்திற்கு, அந்த கட்சியின் பிரிந்துபட்ட தலைமைகள் தனது ஆதரவாளர்களை தள்ளிக் கொண்டிருக்கின்றன என்பது மட்டும் உண்மை.



தொடர்ந்து வரும் உள்கட்சி பிரச்சினைகளில் அடுத்த அத்தியாயமும் எழுதப்பட்டுள்ளது. செவ்வாய் கிழமைவவுனியாவில் கூடிய கட்சியின் சிறப்பு உயர்மட்ட குழு கூட்டத்திற்கு பின்னர், நாளை, சனிக்கிழமை, செப்டம்பர்14-கட்சியின் மத்திய செயற்குழு கூடவி ருப்பதாக தலைவர் (!?!) மாவை சேனாதிராஜா அறிவித்தார். ஆனால், அதற்கான தேவையே இல்லை என்றுகட்சியின்பேச்சாளரான சுமந்திரன் கூறி உள்ளார். உண்மையில், செவ்வாய் கிழமை எடுக்கப்பட்ட முடிவுதான் என்ன?

செவ்வாய் கிழமை நடைபெற்ற கூட்டத்தில், ஜனாதிபதி தேர்தலில் யாரை ஆதரிப்பது என்று பரிந்துரை செய்ய, மத்திய குழுவால் எப்போதோ நியமிக்கப்பட்டு மறந்தடிக்கப்பட்ட சிறப்பு குழுவின் உறுப்பினர்களேபங்குபெற்றார்கள். அப்போது எழுந்த ஒரு பிரச்சினை தான், அடுத்தகட்ட குழப்பங்களுக்கு அச்சாரம் கூறி உள்ளது எனலாம்.

செவ்வாய் கிழமை, ஜனாதிபதி தேர்தலில் சஜித் பிரேமதாசாவை ஆதரிப்கவும், தமிழ் பொது வேட்பாளர் அரியேந்திரனை போட்டியில்



இருந்து விலகிக்கொள்ள அறிவுறுத்தியும் முன்னர் நடைபெற்ற மத்திய குழு கூட்டத்தில் தீர்மானங்கள் எடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. ஆனால், முந்தைய மத்திய குழு கூட்டத்தில், சிறப்பு குழுவின் பரிந்துரைகள் விவாதிக்கப்படாமலே முடிவுகள் எடுக்கப்பட்டன என்ற புதிய கேள்வி செவ்வாய் கிழமை எழுப்பப்பட்டதாக தெரிகிறது.

இதை தொடர்ந்தே, மாவை சேனாதிராசா, மறுபடியும் மத்திய குழு கூட்டத்தை கூட்டி உள்ளார் என்பது போன்ற பிம்பம் தோற்றுவிக்கப்படுகிறது. உண்மையில், சனிக்கிழமை கூட்டம் குறித்து சேனாதிராசா முன்னரே அறிவித்துவிட்டார். அதாவது, ஒரு முடிவுடன்தான் அவர் செவ்வாய் கிழமை கூட்டத்தில் பங்குபெற்றுள்ளார்.

இது விடயத்தில், சுமந்திரன் நிலைமை என்ன? பத்திரிகை செய்திகளை வைத்துப் பார்க்கும்போது, செவ்வாய் கிழமை சந்திப்பில், தமிழர்களுக்கான உரிமை செயல்படுத்தும் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு சஜித்திற்கு எத்தனை கால அவகாசம் தேவைப்படும் என்று கேள்வி எழுப்பப்பட்டுள்ளது. சஜித் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டால் மட்டுமெ இந்த கேள்விக்கு அர்த்தம் உள்ளது.

இந்த கேள்விக்கு பதில் அளித்தபோதே சுமந்திரன், இது குறித்து, தான் சஜித்துடன் கலந்துரையாடிவிட்டு, அதற்கான விடையை பதிவு செய்ய இருப்பதாக அறிவித்தார். இதன் காராணமாக, சனிக்கிழமை கூட்;டத்திற்கு அவசியமே இல்லை என்பதே அவருடைய வாதம்.

### உரிமம், உரிமை

இதில், குறிப்பிடத்தக்ககுழப்படிவாதங்கள்உள்ளன. ஒன்று, கால அவகாசம் குறித்து சஜித்துடன் சுமந்திரன் மட்டுமேகலந்துரையாடினால்போதும்என்றுகட்சியின் எதாவது உள்ளமைப்பு முடிவு செய்திருக்கிறதா? அவ்வாறு இல்லை என்றால், அந்த அதிகாரத்தை சுமந்திரன் எவ்வாறு ஏற்றுக்கொள்ளலாம்?

கடந்த காலங்களில், இதுபோன்ற மேலதிகாரம் காலஞ்சென்ற சம்மந்தனுக்கு மட்டுமே, தமிழ் அரசு கட்சி மற்றும் மறந்தடிக்கப்பட்ட தமிழ் தேசிய கூட்டமைப்புஆகியவற்றில்இருந்துவந்தது. சம்மந்தன் நோய்வாய்பட்ட காலத்தில், அவரது ஆளுமைக்கு உட்பட்டு, பிறருடன் பேசும் உரிமம் அல்லது 'லைசன்ஸ்' சுமந்திரனுக்கு வழங்கப்பட்டிருக்கலாம். அது உரிமை அல்ல.

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

# மாற்றம் ஒன்றே மாறாதது

4ம் பக்க தொடர்ச்சி...........

அதுபோன்றே, தற்போது மாவை தமிழ் அரசு கட்சியின் தலைவரா இல்லையா, என்பது குறித்து பட்டிமன்றமே நடத்தலாம். அவரும் ஒரு நாள் பொறுப்புடன் நடந்து கொள்வதாக பாவனை காட்டுகிறார். மறு நாளே, அல்லது மறு நிமிடமே, தன்னை பொறுப்பற்றவராக அடையாளம் காட்டிக்கொள்விறார். அவர் கட்சித் தலைமை விடயத்தில், நல்லவரா, கெட்டவரா?

### அந்தர் பல்டி

பழையன அனைத்தையும் விட்டுவிடுவோம். கடந்த பத்து தினங்களாகவே உள்கட்சி விவகாரங்களில், சேனாதிராசா அடித்து வரும் அந்தர் பல்டிகள், ஒரு திறம்பட்ட சர்க்கஸ் வீரரை ஒத்துள்ளன. சரியாகச் சொல்லப்போனால், சர்க்கஸ் கோமாளியை போல் அவர் நடந்துகொள்கிறார். உள்ளுக்குள் தன்னைத்திறம்பட்டசர்க்கஸ்வீரராகநினைத்துக்கொண்டாலும், கோமாளி, கோமாளி தானே.

ஆனால், ஒரு விடயம் மட்டும் நிச்சயம். கட்சித் தலைவர் தேர்தல் குறித்த நீதிமன்ற வழக்குகளுக்கு மத்தியில் மாவை அந்தப் பதவியை தற்போது வகிக்கவில்லை என்று யாராவது கூறுவார்களானால், அது போன்று கட்சியின் பேச்சாளர் பதவியும் சுமந்திரனுடையதல்ல. எனவே, அவர் கட்சி குறித்தும், கட்சியின் முடிவுகள் குறித்தும் பேசுவதை எல்லாம், தனி நபர் கருத்தாகவே கருதவேண்டும்.

அதேசமயம், கட்சி விடயங்கள் குறித்து சுமந்திரன் கூறும் கருத்துக்கள் அவர் பேச்சாளர் என்ற நிலையிலேயே கூறுகிறார் என்று கருதினால், அது போன்றே, மாவையாரும் கட்சி தலைவராகவே தொடருகிறார் என்றேகொள்ளவேண்டும். அப்போது, புதிய தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டும் நீதிமன்றத்தில் அல்லாடிக் கொண்டிருக்கும் சிறீதரனின் நிலைமை என்ன? திரிசங்கு சொர்க்கமா?

### போதுமடா சாமி

இதற்கிடையில்மறக்கப்பட்டவிடயம்,அல்லதுமறக்கடிக்கபட்ட விடயம், ஜனாதிபதி தேர்தல் குறித்து சேனாதிராசாவின் அந்தர் பல்டி- அந்தர் பல்டிகள். முதலில், மத்திய குழு கூட்டத்தில் பங்கேற்காமல், சஜித் பிரேமதாசாவிற்கு ஆதரவு குறித்த முடிவு பற்றி தனக்கு தெரியாது என்ற கருத்தைப் பரவவிட்டது. பின்னர், எடுத்த முடிவை செயல்படுத்த, மத்திய குழு கூட்டப்படும் என்ற தலைவர் என்ற தோரணையில் அறிவித்தல், இப்படி, இப்படி.

இடைப்பட்ட காலத்தில், மற்றொரு வேட்பாளரான தற்போதைய ஜனாதிபதி ரணிலை தனது யாழ்பாண வீட்டிலேயே சந்தித்து, அவர் தேர்தலில் வெற்றிபெறுவது போலவும், அதன் காரணமாக சமஷ்டி தீர்வை அமல்படுத்துவது போலவும் முகமன் கூறுதல். பின்னர், கட்சியின் சிறப்பு குழு கூட்டத்தில், மீண்டும் சஜித் ஆதரவு அல்லது ஆதரவிற்குத் தயார் என்பது போன்ற வகையில் உரையாடுதல். போதுமடா சாமி, என்று கூற தோன்றுகிறதா?

வெளியாகி உள்ள பத்திரிகை செய்திகளையும், பத்திகளையும் வைத்து நோக்கும்போது, தனது வீட்டில் ரணிலை சந்தித்த மாவை சேனாதிராசா, தான் போதாது என்று சிறீதரனையும், சார்ல்ஸ் நிர்மலநாதனையும்கூட உடனிழுக்க முயற்சித்தார் என்று தெரிகிறது. அதனை அவர் மறுக்கிறாரா என்பதைப் பொறுத்திருந்து பார்க்க வேண்டும். அல்லது, மற்ற இருவருமாவது இது குறித்து ஏதாவது கருத்து தெரிவிக்கிறார்களா, என்பதும் கேள்வி.

### வடிவ மாற்றம்

அது சரி, நாளை, சனிக்கிழமை, கட்சியின் மத்திய குழு கூடப்போகிறதாஎன்பதைப்பொறுத்திருந்துபார்ப்போம். இல்லை, தனக்கே உரித்தான பச்சோந்தித் தனமாக அரசியலில், அந்த கூட்டம் நடக்க இருப்பதாக, தான் எந்தவித அறிவித்தலும் விடுக்கவில்லை என்று சேனாதிராசா கூறுவாரா?

எதுஎப்படியோ, அவ்வாறானகூட்டம்நடைபெறுமேயானால், அதில்சுமந்திரன்கலந்துகொள்வாரா? அவரைச்சார்ந்துள்ளதாகக் கருதப்படும் சில மூத்த தலைவர்கள் பங்குபெறுவார்களா? கடந்த முறை மத்திய குழு கூடியபோது, அதில் சுமந்திரன் கையே ஓங்கி இருந்தது.

சட்டவல்லுனரான அவருக்கு, மத்திய குழுக் கூட்டத்தை புறக்கணிப்பதால் ஏற்படும் இழப்புகள் குறித்து புரிந்தே இருக்கும். அது போன்றே, மத்திய குழு கூட்டங்களில் தொடர்ந்து தனது ஆதரவு நிலை வெற்றிபெற்றதாக காட்டிக் கொள்வதும், காலத்தின் கட்டாயம். மட்டுமல்ல, அது ஒரு விதத்தில், சட்டத்தின் நிர்பந்தமும்கூட.

### வடிவ மாற்றம்

தமிழ்அரசுகட்சியின்உள்வீட்டுகுளறுபடிகள்குறித்துஅண் மையில் கருத்துகூறிய சுமந்திரன் அது சமகால அரசியலில் 'வடிவமாற்றத்தின்' வெளிப்பாடே என்று விளக்க முற்பட்டுள்ளார். ஆங்கிலத்தில் அதனை 'டிரான்சிஷன்' என்பார்கள்.

பல தசாப்தங்களாக, பல தலைமுறைகளாக நீண்டு நிற்கும் ஓர் அரசியல் கட்சி என்றல்ல, நாடு, மக்கள், சமூகம், குடும்பம் மற்றும் நிறுவனங்கள் மற்றும் அமைப்புகளின் நிலைமையும் இதுவே. அந்த விதத்தில், தமிழ் அரசு கட்சி குறித்து சுமந்திரன் கூறிய கருத்து, தென்னிலங்கையில் கடந்த ஐந்து ஆண்டுகளுக்கும் மேலாக அரங்கேறி வருகிறது.

தென்னிலங்கையில், முறையே ஐக்கிய தேசிய கட்சி, மற்றும் அதில் இருந்து கடந்து ஐம்பதுகளில் இருந்தே பிரிந்து சென்ற சுதந்திரக் கட்சி ஆகிய இரண்டும் அடுத்தடுத்துத் துண்டானது. அதனைத் தொடர்ந்து, தற்போது, சுதந்திரக் கட்சியில் இருந்து பிரிந்து சென்ற மொட்டு கட்சியும் வாடிவிடும் நிலைமையில் உள்ளன. தாய் கட்சியான சுதந்திர கட்சியும் மேலும் மூன்றாக பிரிந்துள்ளது.

### புலியை பார்த்து

ஐக்கிய தேசிய கட்சி மற்றும் சுதந்திர கட்சி ஆகியவற்றிற்கு சில ஆண்டுகளுக்கு முன்னரே, யாரும் கணக்கில் எடுக்காத ஜேவிபி என்ற மக்கள் விடுதலை முன்னணி இரண்டாக உடைந்தது. அன்று கட்சியின் முன்னணி தலைவரில் ஒருவரான விமல் வீரவன்ஸ, புதிதாக ஒரு கட்சியை துவங்கி, இன்று காணாமல் போய் கொண்டிருக்கிறார்.

அப்போது ஒரு முறை, பின்னர் 2011-இல் முன்னணி சோஷலிஸ்ட் கட்சி என்ற பெயரில் மற்றொரு முறை உடைந்த மக்கள் விடுதலை முன்னணி, இன்று ஜனாதிபதி தேர்தலில் முன்னணியில் இருப்பதாகக் கருதப்படுகிறது. இதுவும் காலத்தின் கட்டாயம்தான். ஆனால், அவர்கள் இருவருக்குமோ, தாங்கள் பின்னால் நின்று இயக்கி, வெற்றி அடைய செய்த அரகலயா போராட்டம் மக்களின் வெற்றி என்று தொடர்ந்து பிரகடனப்படுத்த வேண்டிய நிர்பந்தம்.

ஆனால், இதுவே தமிழ் அரசு கட்சியிலும் வரவேற்கதக்க மாற்றங்களை ஏற்படுத்தும் என்று நினைப்பது, புலியை பார்த்து பூனை சூடு போட்டுக் கொண்ட கதையாக முடியலாம். காரணம், வடக்கு -கிழக்கு மற்றும் தெற்கு ஆகிய பகுதிகளில் நிலவும் களநிலைகள் வெவ்வேறானவை. அவற்றிற்கு ஏற்றவாறே, எந்த திசையில் தமிழ் அரசியல் மற்றும் தமிழ் அரசு அரசியல் பயணிக்கும் என்பது முடிவாகும்.

தற்போதைய நிலையில், சுமந்திரனின் கூற்றை வைத்து நோக்கும் போது, மாற்றம் ஒன்றே மாறாதது. அதாவது, மாறாததே மாற்றம். மற்றவை எல்லாம், மாறுபவை தான். என்ன, குழப்பமாக இருக்கிறதா? அதுதான், தமிழ் அரசின் நிலைமையும், அதனை தொடர்ந்து தமிழ் அரசியலின் நிலைமையும் கூட!



# ஜனநாயகப் பங்குதாரர்களுக்கான ஓர் இடம் அமைத்தல் கலந்தாய்வு



(ஹஸ்பர் ஏ.எச்)

இலங்கையின் கிழக்கு மாகாணத்தின் அபிவிருத்திக்காக உள்ளூர்சிவில்அமைப்புக்களுடனானஉண்மை வெளிப்பாட்டுத் தன்மையை அதிகரித்தல் தொடர்பிலான கலந்துரையாடல் ஒன்று தம்பலகாமம் பிரதேச செயலக மண்டபத்தில் புதன்கிழமை இடம்பற்றது.

அகம் மனிதாபிமான வளநிலையத்தின் உள்ளூராட்சி மன்றங்களுடனான உண்மைதன்மை வெளிப்படை தன்மை தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டன.





ஏற்பாட்டில் இடம் பெற்ற குறித்த கலந்துரையாடலில்

மேற்படி கலந்துரையாடல் 45 நாள்களுக்கு ஒரு முறை இடம் பெற்று வருகிறது .தம்பலகாமம் பிரதேச சபைக்குட்பட்ட பகுதியான 9 ஆம் கொலணியில் வீதி மின் விளக்கு இன்மையால் பல அசௌகரியங்களை எதிர்நோக்குவதாக இதில் கலந்து கொண்ட சிவில் செயற்பாட்டாளர் பிரதேச சபை செயலாளரிடம் சுட்டிக்காட்டினார்.

மேலும் சிராஜ் நகர் வாசிக சாலையில் நூல்கள் குறைவாக காணப்படுவதாலும் அதனை நிவர்த்திக் குமாறும் குறித்த பகுதியில் வாசிப்பு திறனை மேம்படுத்த உள்ளூராட்சி மன்றம் பங்களிப்புச் செய்யவும் யமுனுபுர சந்தை பகுதியில் கொட்டப்படும் கழிவுகள் முறையாக அகற்றப்படாமை சூழல் மாசடைதல் தொடர்பில் இளைஞர் யுவதி ஒருவர் பிரதேச சபை செயலாளரிடம் எடுத்துரைத்தார். மீரா நகர் கிராம சேவகர் பிரிவில் வீதி மின்விளக்கின்மை உள்ளிட்ட பல காரணங்களால் பல துன்பங்களை எதிர்நோக்குவதாகவும் இதன் போது சிவில் சமூக செயற்பாட்டாளர் தெரிவித்தார்.

ஆக்கபூர்வமான கருத்துக்களை முன்வைத்து வெளிப்படைத் தன்மையுடன் இயங்கக்கூடிய குழு மூலமாக இதன் போது ஏற்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேற்படி நிகழ்வில் பிரதேச சபை செயலாளர், அகம் நிலைய திட்ட இணைப்பாளர், உத்தியோகத்தர்கள், சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.(05)





# பதவி உயர்வு பெற்றமைக்காக பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு

(எம்.ஏ.றமீஸ்)

அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரியில் கடந்த ஒன்பது வருடங்களாக ஆசிரியர் சேவையாற்றி வந்த ஆசிரியர் ஏ.பேரின்பராசா விவசாயத்துறைபோட்டிப்பரீட்சைஒன்றின்மூலம்தெரிவுசெய்யப்பட்டுஉதவி விவசாயப் பணிப்பாளராக தற்போது பதவி உயர்வு பெற்றுள்ளமையினை பாராட்டி கௌரவிக்கும் வைபவம் நேற்று(புதன்கிழமை) கல்லூரி வளாகத்தில் இடம்பெற்றது.

அதிபர் ஏ.எச்.பௌஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வின்போது உதவி விவசாயப் பணிப்பாளராகத் தெரிவு செய்யப்பட்டு பதவி உயர்வு பெற்றுள்ள ஏ.பேரின்பரசா பாடசாலையின் ஆளணியினரால் நினைவுச் சின்னம் மற்றும் நினைவுப் பரிசில்கள் போன்றன வழங்கி வைக்கப்பட்டன.

பாடசாலை நலன்புரி அமைப்பின் மூலம் ஒழுங்கு செய்யப்பட்ட இந்நிகழ்வின்போது, பாடசாலை கல்விச்செயற்பாடுகளில் அவர் தன்னலமற்ற சேவையை புரிந்தமை தொடர்பிலும், பாடசாலையின் ஆளணியினருடன் பரஸ்பரம் ஒற்றுமையுடனான உறவைப் பேணியதுடன், பாடசாலை நிர்வாக செயற்பாடுகளுக்கும் தன்னாலான பூரண ஒத்துழைப்புகளையும் நல்கியமை பற்றியும் இதன்போது அதிபர் தலைமையிலான ஆளணியினர் பிரஸ்தாபித்து உரையாற்றிமை குறிப்பிடத்தக்கது. (05)



காலைக்கதிர் Kalaikkathir




# சைவ சமயத்தின் சிறப்பு



சைவசமயம் என்பது சிவபெருமானுடன் சம்பந்தப்படுவதாக திருமூலர் திருமந்திரத்தில் குறிப்பிடுகின்றார். சைவசமயம் சிவபெருமானை முழுமுதற் கடவுளாக வணங்கும் சமயமாகும். சிவ வழிபாட்டினை சிவநெறி என்றும் சைவநெறி என்றும் கூறலாம். சைவ சமயத்தினை சுருக்கமாக 'சைவம்' என்று அழைக்கிறார்கள். பழந்தமிழர்களின் ஐந்நிலத் தெய்வமான சேயோன் வழிபாடே சிவ வழிபாடாக மாறியதையும், இம் மதத்தினை சிவமதம் என்றும் தமிழர் சமயம் நூலில் பாவணார் குறிப்பிடுகிறார். உலகிலேயே முதன் முதல் தோன்றிய சமயம் சைவசமயம் எனக் கூறப்படுகின்றது.

யாழ்ப்பாணத்தில் நகுலேஸ்வரமும், மன்னாரில் திருக்கேதீச்சரமும், திருகோணமலையில் திருக்கோணேச்சரமும், முல்லைத்தீவில் கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ் வரமும், புத்தளம் முனீஸ்வரமும் என்ற ஐந்து ஈச்சரங்கள் காணப்படுகின்றன. இதனாலேயே திருமூலர் இலங்கையை சிவபூமி எனப் போற்றினார். நகுலகிரி முனிவர் நகுலேஸ்வரத்தில் தனது கீரிமுகத்தை நீங்கப் பெற்றார். ஸ்ரீராமர் திருக்கோணேச்சரத்தில் தனது பிரம்மஹத்தி தோஷம் நீங்கப்பெற்றார்.

இந்து சமயப் பிரிவுகளான வைணவம், சாக்தம், கௌமாரம், காணாபத்தியம், சௌரம் முதலிய பிற பிரிவுகளை தன்னுள் எடுத்துக்கொண்ட இச்சமயம் இந்து சமயப் பிரிவுகளுள் மிக முதன்மையானதாகக் கொள்ளப்படுகின்றது. இச்சமயத்தினை இருநூற்று இருபது பில்லியனுக்கு மேற்பட்ட மக்கள் பின்பற்றுகின்றனர். பக்தி இலக்கிய காலத்தில் சைவம் தமிழுக்கு பெரும்சேவை செய்து 'சைவத்தமிழ்' எனும் பெயர் பெற்றது. இதற்கு நாயன்மார்களான திருஞானசம்பந்தர், சுந்தரமூர்த்திநாயனார், திருநாவுக்கரசர், மாணிக்கவாசகரும் சமயக் குரவர்களான குமரகுருபரர், பூசலார், கச்சியப்பர் போன்றவர்களும் பெரும் உதவி புரிந்தனர்.

'தென்னாடுடைய சிவனே போற்றி எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி' என்பது இறைவனை வாழ்த்திப் பாடப்படுவதாகும். வேதங்கள், ஆகமங்கள் முதலானவை சிவபெருமானின் சதாசிவக் கோலத்தினால் அருளப்பட்டவை என்பர். பதினெண் புராணங்களுள் பத்து புராணங்கள் சிவபெருமான் பற்றியவை. ஒவ்வொரு நாயன்மார்களும் சிவபெருமான் பற்றிப் பாடி அருளியுள்ளனர். திருஞான சம்பந்தர் 'தோடுடைய செவியன்', சுந்தரமூர்த்தி நாயனார் 'பித்தா பிறைசூடி', மாணிக்கவாசகர் 'பால் நினைந்தூட்டும்', திருநாவுக்கரசர் 'ஓசையொலியெலாம்' என்று பல பாடல்களைப் பாடியுள்ளனர்.

இந்தியா, இலங்கை, நேபாளம், தென்கிழக்காசியா, ஐரோப்பா முதலான எல்லா நாடுகளிலும் சிவாலயங்கள் காணப்படுகின்றன. மத்திய அமெரிக்காவின் மாயன் நாகரிகமும், கிழக்காசிய நாடுகளில் ஜவா, பாலி முதலிய இடங்களில் காணப்படும் கோயில் இடிபாடுகளும் சிவவழிபாடு உலகமெங்கும் இருந்துள்ளமையை காட்டுகின்றன. சிந்து சமவெளி நாகரிகத்தினை ஆய்வு செய்து எழுதிய சர் ஜான் மார்ஷல் என்பவர் உலகின் மிகப் பழைய சமயமாகச் சைவசமயம் விளங்குகின்றது எனக் கூறுகிறார். ஆகையால் சைவர்கள் சைவ சமயத்திலிருந்து மாறாமல் சைவத்தை கடைப்பிடிக்க வேண்டும். உலகிலேயே சிறந்த சமயம் சைவசமயமாகும்.

**ஜெ.அபிஷனா**
**தரம் 06, கோப்பாய், சரவணபவானந்த வித்தியாலயம்**

முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City

எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!

இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!

உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்

முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்

SUPERMARKET

4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd



தொடர்புகளுக்கு: 0777 43 5557

காலைக்கதிர் Kalaikkathir

## நாமலின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆதரித்து லக்கல, ஹெட்டிபொல நகரில் செப்டெம்பர் 9 நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்திலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தேர்தல் கூட்டத்திற்கு மது போதையில் வந்த நபர்கள் சிலர் அங்கு உரையாற்றிக் கொண்டிருந்த நாடாளுமன்ற உறுப்பினர் நாலக பண்டார கோட்டேகொடவுக்கு சாவு அச்சுறுத்தல் விடுத்து கூச்சலிட்டுள்ளனர் என்று கூறப்படுகின்றது.

## கஜேந்திரன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொறிக்கப்படாத காரணத்தாலேயே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் மற்றும் கட்சி ஆதரவாளர்கள் முல்லைத்தீவு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் தேர்தல் புறக்கணிப்புப் பரப்புரையில் ஈடுபட்டிருந்தனர். நேற்று மதியம் புதுக்குடியிருப்பு நகரப்பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்களில் துண்டறிக்கைகளை விநியோகம் செய்துகொண்டிருந்தபோது அங்கு வந்து துண்டுப் பிரசுரங்களைப் பறிமுதல் செய்தனர்.

அந்தத் துண்டுப் பிரசுரங்களில் என்ன அச்சிடப்பட்டிருக்கின்றது என்று பொலிஸார் விசாரித்தபோது இரண்டு தரப்பினருக்கும் இடையில் முறுகல் நிலை தோன்றியது. இதையடுத்து முல்லைத்தீவு மாவட்ட தேர்தல்கள் அலுவலகத்துக்கு இது தொடர்பில் பொலிஸாரால் அறிவிக்கப்பட்டு, அவர்கள் அந்த இடத்துக்கு வருகைதந்து துண்டுப்பிரசுரத்தைப் பார்வையிட்டனர்.

அதேநேரம், தேர்தல் செலவீனங்களை மதிப்பிடுவதற்காக துண்டுப்பிரசுரங்களில் அச்சகத்தின் பெயர் கட்டாயம் அச்சிடப்பட்ட வேண்டும் எனவும், அவ்வாறு அச்சக பெயருடன்கூடிய துண்டுப் பிரசுரங்களை விநியோகிக்குமாறு கூறிய பொலிஸார் அவர்கள் கைவசமிருந்த ஒருதொகை துண்டுப் பிரசுரங்களையும்

## வாக்காளர் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அட்டையைப் பெறமுடியும். தேர்தல் வாக்கெடுப்பு நடைபெறும் தினம் வரை இந்தச் சந்தர்ப்பம் வாக்காளர்களுக்கு உள்ளது. இதுவரை சுமார் 10 மில்லியன் வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

எஞ்சியுள்ள வாக்காளர் அட்டைகளை எதிர்வரும் சில தினங்களில் விநியோக்க நடவடிக்கை எடுக்கப்படுமென உபதபால்மா அதிபர் ராஜித ரணசிங்க தெரிவித்துள்ளார்.

## புதிய கல்வி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனைக் குறிப்பிட்டார்.

விஜயா பத்திரிகை நிறுவனத்துடன் இணைந்ததாக டைம்ஸ் உயர்கல்வி நிறுவனம் நிறுவப்பட்டு, மூன்று வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களுடன் இணைந்து சர்வதேச தரத்திற்கு ஏற்ப கல்வி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

மூன்று முக்கிய தகுதிப் பிரிவுகளின் கீழ் பலதரப்பட்ட தொழில் சார்ந்த கற்கை நெறிகள் இங்கு வழங்கப்படுகின்றன. அதன்படி சான்றிதழ், டிப்ளமோ, உயர் டிப்ளமோ கற்கைகள் மற்றும் டிஜிட்டல் அகடமி ஊடாக தொழில்முறை திறன் மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் பட்டப்பின் படிப்புகள் இங்கு நடத்தப்படும்.

'டைம்ஸ்' உயர்கல்வி நிறுவனத்தின் செயல்பாடுகள் விஜயா பத்திரிகை நிறுவனத்தினால் நியமிக்கப்படும் துறை சார்ந்த வல்லுநர்களைக் கொண்ட ஐந்து பேர் கொண்ட ஆலோசனைக் குழுவால் நிர்வகிக்கப்படும். இளைஞர்கள் எதிர்காலத்தில் பல வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களுடன் இணைவதன் மூலம் உலகத் தரத்திற்கு ஏற்ப தரமான கல்வியை உறுதி செய்வதே இதன் நோக்கம் என்று நிர்வாகக் குழு கூறுகிறது.

இதன்போது டைம்ஸ் ஸ்கூல் ஓஃப் ஹையர் எடியுகேசன் (Times School of Higher Education) என்ற புதிய இணையதளத்தையும் ஜனாதிபதி தொடக்கி வைத்தார். அதனைத் தொடர்ந்து உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்ததாவது:

இன்று, நாம் எதிர்பார்க்கும் நவீன கல்வி முறைக்குரிய டைம்ஸ் உயர்கல்வி நிறுவனத்தைத் திறந்து வைத்தேன். உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த பின்னர் டிப்ளோமா கற்கைகளைத் தொடர விரும்பும் மாணவர்களுக்குக் கல்வி வாய்ப்புகளை இந்த நிறுவனம் வழங்க இருக்கிறது.

ஏற்றுமதிப் பொருளாதாரத்தை நோக்கிச் செல்லவேண்டுமானால், 21ஆம் நூற்றாண்டின் மத்தியில் எதிர்காலத்தை நோக்கிச் செல்வதாயின், நமது நாட்டின் எதிர்கால வளர்ச்சிக்கு புதிய அறிவு தேவைப்படுகிறது. எனவே, எதிர்காலத்தில் இதுபோன்ற பல நிறுவனங்கள் உருவாக்கப்படவேண்டும். இந்த நிறுவனம் டிஜிட்டல் அகாடமியையும் கொண்டுள்ளது. இந்த கல்வி நிறுவனங்களால் நம் நாட்டு இளைஞர்கள் பெரிதும் பயனடையலாம்.

50,000 இளைஞர்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களின் ஊடாக தொழில் பயிற்சி வழங்க அரசு நிதியுதவி அளிக்கவுள்ளது. அந்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு இவ்வாறான நிறுவனங்களை அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களாக மாற்றும் திறன் எங்களிடம் உள்ளது. தற்போதுள்ள பயிற்சி நிறுவனங்களுக்கு மேலதிகமாக இத்திட்டத்தை செயல்படுத்தி வருகிறோம்.

அடுத்த சில ஆண்டுகளில் நாட்டின் வளர்ச்சியுடன், முதலீட்டு வாய்ப்புகள் அதிகரித்து, புதிய தொழில்கள் ஆரம்பிக்கும்போது, அரச மற்றும் தனியார் துறைகளில் சுமார் 100,000 புதிய வேலை வாய்ப்புகள் உருவாக்கப்படும்.

நாம் உருவாக்க நினைக்கும் டிஜிட்டல் பொருளாதாரத்திற்கு, இதுபோன்ற நிறுவனங்கள் அவசியம். எனவே, நமது நாட்டில் இதுபோன்ற கல்வி நிறுவனங்களை அரச மற்றும் அரச சாராத வகையில் அதிகரித்து, இந்த நாட்டின் இளைஞர்களுக்கு நல்ல வேலை வாய்ப்புகளைத் தேடுவதற்குத் தேவையான ஆதரவை வழங்க எதிர்பார்க்கிறோம் என்றார்.

## ஒக்டோபர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரி தெரிவித்துள்ளார்.

எல்பிட்டிய உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான கட்டுப்பணம் செலுத்துவது செப்டெம்பர் 9 தொடங்கியது. நேற்று நண்பகல் 12.00 மணி வரை காலி மாவட்ட செயலகத்தில் வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. 10 அரசியல் கட்சிகளும் இரண்டு சுயேச்சைக் குழுக்களும் கட்டுப்பணத்தை வைப்பிலிட்டுள்ளன.

## வேட்பாளர்களின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மூலம் பாதுகாப்பு தரப்பினர் கடும் நெருக்கடிகளுக்குள்ளாகியுள்ளனர் எனவும் பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர். இதேவேளை, ஜனாதிபதி வேட்பாளர்களின் பாதுகாப்பு தொடர்பான அறிக்கையை நாளாந்தம் பெற்றுக்கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com






# கிளிநொச்சி மாவட்ட விவசாய குழுக்கூட்டத்தில் பல்வேறு விடயங்கள் தொடர்பாகவும் ஆராய்வு






கிளிநொச்சி மாவட்டத்தின் மாவட்ட விவசாய குழுக் கூட்டம் நேற்று (வியாழக்கிழமை) மாவட்ட செயலக மாநாடு மண்டபத்தில் நடைபெற்றது.

குறித்த கலந்துரையாடல் கிளிநொச்சி மாவட்ட பதில் அரசாங்க அதிபர் எஸ். முரளிதரன் தலைமையில் காலை 9.30 மணிக்கு நடைபெற்றது.

இதன்போது, இரணைமடுக் குளத்தின் கீழான சிறுபோக பயிர்செய்கை தொடர்பில் துறைசார்ந்த அதிகாரிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் தீர்மானங்கள் தொடர்பாக ஆராயப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்தில் இம்முறை மேற்கொள்ளப்படவுள்ள விவசாய செயற்பாடுகள் தொடர்பாகவும், பெரும்போக விவசாயத்திற்குத் தேவையான முன்னாயத்த விடயங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டன.

மேலும் நீர்ப்பாசன குளங்களின் தற்போதைய நிலைமைகள், சிறுபோக பயிர்ச்செய்கை, துறைசார்ந்த திணைக்களங்களால் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்ற திட்டங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டன.

இந்தக் கலந்துரையாடலில் திட்டமிடல் பணிப்பாளர், சமுர்த்தி பணிப்பாளர், கரைச்சி பிரதேச செயலாளர், பிரதி மாகாண விவசாய பணிப்பாளர், நீர்ப்பாசனத் திணைக்கள அதிகாரிகள், கமநல அபிவிருத்தி திணைக்கள உதவி ஆணையாளர், பிரதேச செயலகங்களின் உதவி திட்டமிடல் பணிப்பாளர்கள், காணி பயன்பாட்டு திட்டமிடல் பிரிவின் உதவிப் பணிப்பாளர், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், விவசாய காப்புறுதி, விதை ஆராய்ச்சி நிலைய அதிகாரிகள், மாவட்ட விவசாய பிரிவு உத்தியோகத்தர்கள், உள்ளிட்ட பல்வேறு திணைக்களங்களின் விடய உத்தியோகத்தர்கள், கமக்கார அமைப்புக்களின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

(05-113)

# சிறுவர் உரிமைகளைப் பாதுகாக்கக்கோரி ஒட்டுசுட்டானில் விழிப்புணர்வு நடைபவனி





சிறுவர்உரிமைகளைபாதுகாக்ககோரிவிழிப்புணர்வு நடைபவனி ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்திற்கு முன்பாக புதன்கிழமை மாலை 3.30 மணியளவில் ஆரம்பமாகி நடைபெற்றிருந்தது.

சிறுவர் பாதுகாப்பு வாரத்தை முன்னிட்டு நாம் சிறுவர் எம்மை காப்பீர் எனும் தொனிப்பொருளிலான விழிப்புணர்வு பேரணியை ஒட்டுசுட்டான் பிரதேச செயலக சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் ம.வினோத் ஆரம்பித்து வைத்திருந்தார்.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்திற்கு முன்பாக ஆரம்பிக்கப்பட்ட குறித்த பேரணி, நடைபவனியாக சென்று ஒட்டுசுட்டான் பிரதேச சிறுவர் பூங்காவில் நிறைவு பெற்றிருந்தது. ஜெப ஆலயமிஷன் திருச்சபையின் கீழ் இயங்கும் பெத்தேல் சிறுவர் அபிவிருத்திநிலையத்தின்ஏற்பாட்டில் குறித்த விழிப்புணர்வு பேரணி நடைபெற்றிருந்தது.

சிறுவர் துஷ்பிரயோகத்திற்கு மன்னிப்பு இல்லை, குழந்தைகளின் சிறப்பான எதிர்காலத்திற்காக நாம் நமது நிகழ்காலத்தை தியாகம் செய்வோம், அமர்த்தாதே அமர்த்தாதே சிறுவர்களை வேலைக்கு அமர்த்தாதே, சிறுவர்களுக்கான சிறுவர் நேயமுள்ளதும் பாதுகாப்பு மிக்கதுமான சூழலொன்றை கட்டியெழுப்புவோம், அம்மா அப்பா, அக்கா, அண்ணா, என்னைத் திட்டாதீர்கள் நான் சின்ன பிள்ளை, வன்முறைகளிலிருந்து சிறுவர்களை நாம் பாதுகாப்போம் போன்ற பல்வேறு பதாதைகள் தாங்கிய விழிப்புணர்வு பதாதைகளுடன் நடைபவனி இடம்பெற்றிருந்தது .

குறித்தபேரணியில்ஒட்டுசுட்டான் பிரதேச செயலக சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் ம.வினோத், வெத்தேல் சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் இயக்குனர் காலேப் மற்றும் உத்தியோகத்தர்கள், பெற்றோர்கள், சிறுவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.(05)



# காணாமல்போன பெண்ணைக் கண்டுபிடிக்க பொதுமக்களிடம் உதவி கோரும் பொலிஸார்

காணாமல்போன பெண் ஒருவரை கண்டுபிடிக்க பொலிஸார் பொதுமக்களிடம் உதவி கோரியுள்ளனர்.

இரத்தினபுரி எத்லியா பிரதேசத்தைச் சேர்ந்த 41 வயதுடைய பெண்ணொருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

காணாமல்போன பெண்ணின் மகளால் இரத்தினபுரி பொலிஸ் நிலையத்தில் வழங்கப்பட்டுள்ள முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த புகைப்படத்தில் உள்ள பெண் தொடர்பில் ஏதேனும் தகவல்கள் கிடைத்தால் இரத்தினபுரி பொலிஸ் நிலையத்தின் 071-859 1385 அல்லது 045-222 2222 என்ற இலக்கங்களுக்கு தொடர்பு கொள்ளுமாறு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காணாமல்போன பெண்ணின் விவரங்கள்:

பெயர் - அங்கப்புலிகே தர்ஷினி இந்திகா ஜயலத்

வயது - 41

முகவரி - 7/21, எத்லியா , இரத்தினபுரி

தேசிய அடையாள அட்டை இலக்கம் - 198085000876 (05)

# வவுனியா பேருந்து நிலையத்தில் போ.சபை நடத்துனர் மீது தாக்குதல்

வவுனியா புதிய பஸ் நிலையத்தில் அரச பஸ் நடத்துநர் மீது புதன்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

யாழிலிருந்து அக்கறைப்பற்று நோக்கி புறப்பட்ட அரச பஸ், புதன்கிழமை பிற்பகல் வேளையில் வவுனியா புதிய பஸ் நிலையத்தில் தரித்து நின்ற வேளையில் குறித்த பஸ்ஸின் நடத்துனர் மீது வவுனியா - கொழும்பு பயணிக்கும் தனியார் பேருந்தின் சாரதி ஒருவர் தாக்குதலை மேற்கொண்டதில் அரச பேருந்தின் நடத்துனர் காயமடைந்த நிலையில் வவுனியா பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார்

இதேவேளை குறித்த சம்பவத்தினை தொடர்ந்து அதே தனியார் பேருந்தில் பணிபுரிந்த நபர் ஒருவர் வாளுடன் புதிய பேருந்து நிலையத்திற்கு வருகை தந்து அப்பகுதியிலிருந்த அரச பேருந்து ஊழியர்கள் மீது தாக்குதலை நடத்தியதில் மேலும் ஒருவர் காயமடைந்துள்ளார் என அரச பேருந்து ஊழியர்கள் தெரிவிக்கின்றனர் , இது தொடர் பாக பொலிஸ் முறைப்பாடும் செய்துள்ளதாகவும் தெரிவித் துள்ளனர்.

சம்பவம் தொடர்பான சிசிரிவி காணொளிகள் பேருந்து நிலையத்தில் காணப்படுவதுடன் இது தொடர்பான விசாரணைகளை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.

குறித்த தனியார் பேருந்தானது கொழும்பிலிருந்து வவுனியா பயணிக்கும் பேருந்து என்பதுடன் வவுனியா மாவட்ட தனியார் பேருந்து சங்கத்தின் கட்டுப்பாட்டில் இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (05)

# அரச பேருந்துகள் பணிப்புறக்கணிப்பு வவுனியாவில்




தமது ஊழியர்களை தாக்கியவர்கள் மீது நடவடிக்கை எடுக்க கோரி இலங்கை போக்குவரத்துசபையின் வவுனியா வீதி ஊழியர்கள் நேற்று (வியாழக்கிழமை) பணிபகிஸ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

புதன்கிழமை வவுனியா புதிய பஸ் நிலையத்தில் கடமையில் இருந்த அரச பஸ் நடத்துனர் மற்றும் ஊழியர்கள் மீது வவுனியாவில் இருந்து கொழும்பு நோக்கி பயணிக்கும் தனியார் பஸ் ஊழியர்கள் தாக்குதலை மேற்கொண்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த சம்பவத்தால் அரச பஸ்தரப்பினை சேர்ந்த ஒருவர் காயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில் தாக்குதல் மேற்கொண்டவர்களை கைதுசெய்யுமாறு தெரிவித்து போக்குவரத்துச்சபையின் வவுனியா வீதி ஊழியர்கள் நேற்று காலை முதல் பணிபகிஸ்கரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதேவேளை, தமது கோரிக்கைக்கு உரிய நடவடிக்கை எடுக்கத் தவறும் பட்சத்தில் வட மாகாண ரீதியாக பணிபகிஸ்கரிப்பு முன்னெடுக்கப்படும் என அவர்கள் தெரிவித்தனர்.

குறித்த நடவடிக்கை காரணமாக பயணிகள் பல்வேறு அசௌகரியங்களுக்கு உள்ளாகியமை குறிப்பிடத்தக்கது. (05)

காலைக்கதிர் Kalaikkathir

# கந்தப்பளையில் அதிபர் அடித்ததில் 7 மாணவர்கள் வைத்தியசாலையில்

## அதிபரை இடமாற்றம் செய்யக்கோரி போராட்டம்







நுவரெலியா கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலையொன்றில்இம்முறை5ஆம்ஆண்டுபுலமைப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள 07 மாணவர்கள் அதிபரின் தாக்குதலுக்கு இலக்காகி காயங்களுடன் நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் குறித்த மாணவர்களின் பெற்றோர்களால் ராகலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றையும் பதிவு செய்துள்ளனர்.

அத்துடன் நுவரெலியா வலயக் கல்வி காரியாலயத்திற்கு சென்று குறித்த பாடசாலையின் அதிபரை இடமாற்றம் செய்ய கோரியும் பாடசாலை அதிபருக்கு தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு கோரியும் எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளனர்.

எனினும் இதுவரை உரிய தீர்வு கிடைக்காதன் காரணமாகவே பெற்றோர் மற்றும் பழைய மாணவர்கள் இணைந்து புதன்கிழமை குறித்த போராட்டத்தை முன்னெடுத்துள்ளதாக போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்ட மாணவர்களின் பெற்றோர் கூறுகையில் –

கடந்த சனிக்கிழமை பாடசாலையின் அதிபரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கல்வி கருத்தரங்குக்கு செல்லாத ஏழு மாணவர்களை பிரம்பால் தாக்கினார் எனவும் இதனால் அவர்கள் நடக்க கூட முடியாது உள்ளதாகவும் தெரிவித்தனர்.

மேலும்குறித்தஅதிபர்பாடசாலைக்குமாணவர்களை அழைத்துவரும்பெற்றோர்களிடம்தகாதவார்த்தைகளால் பேசுவதாகவும் , தற்போது நியமிக்கப்பட்டுள்ள அதிபர் நிர்வாகத்திறன்அற்றவராகஉள்ளநிலையில்உடனடியாக அவரை மாற்றி புதிய அதிபரை நியமிக்குமாறும் கோரியுள்ளனர்.

இவ்விடயம் தொடர்பில் நீண்ட காலமாக உரிய அதிகாரிகளிடம் கோரிக்கைவிடுத்தபோதும்இதுவரை குறிப்பிட்ட அதிபரை இடமாற்றம் செய்ய எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளாமையால் குறித்த போராட்டத்தினை முன்னெடுத்தனர்.

அதேவேளை, போராட்டம் இடம்பெற்ற இடத்திற்கு வருகை தந்த நுவரெலியா வலயக்கல்வி பணிமனை அதிகாரிகளும், ராகலை பொலிஸ் நிலைய அதிகாரிகளும் உடனடியாக இந்த விடயம் தொடர்பாக துரித நடவடிக்கைகளை மேற்கொள்வதாக தெரிவித்து பாடசாலையில் இருந்து குறித்த அதிபரை வெளியேற்றி நுவரெலியா வலயக்கல்விபணிமனைஅழைத்துச் சென்றதன் பின்னர் போராட்டம் கைவிடப்பட்டது.(05)

# சாய்ந்தமருது அரசியல் மேடையில் இரு குழுக்களுக்கிடையில் மோதல்





சாய்ந்தமருதில் 'இயலும் சிறீலங்கா' ஜனாதிபதி வேட்பாளர் ரணிலை ஆதரித்து நேற்று புதன்கிழமை மாலை இடம்பெற்ற கூட்டம் நிறைவு பெற்ற பின் இரு குழுக்களுக்கிடையில் மோதல் நிலை உருவானது.

இதனால் குறித்த வளாகத்தில் சில நிமிடங்கள் பதற்றம் ஏற்பட்ட நிலையில், சம்பவ இடத்திற்கு கலகமடக்கும் பொலிஸார் வரவழைக்கப்பட்டு நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

ஜனாதிபதியுடன் முண்டியடித்துக்கொண்டு கைலாகு கொடுக்கும் போது ஏற்பட்ட வாய்த்தர்க்கமே இந்த குழு மோதலுக்கு காரணம் எனக் கூறப்படுகிறது.

(05)

# இலங்கைக்கு 10 கோடி அமெரிக்க டொலரை ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்க இணக்கம்

## நீர் வழங்கல் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்காக

*இலங்கையின் நீர் வழங்கல் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்த 100 மில்லியன் அமெரிக்க டொலர் கடனுதவி வழங்க ஆசிய அபிவிருத்தி வங்கி அனுமதி வழங்கியுள்ளது.*

*இதன் மூலம் காலநிலை மாற்றத்தால் நீர்வளத்துக்கு ஏற்படும் பாதிப்பை குறைக்கலாம் என தெரிவிக்கப்படுகிறது.*

*100 மில்லியன் அமெரிக்க டொலர் உதவியில் நீர் வழங்கல் மற்றும் சுகாதார மேம்பாட்டுத் திட்டம் இரண்டு துணைத் திட்டங்களை கொண்டுள்ளது.*

*முதலாவது திட்டம் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபைக்கு தேசிய கொள்கைகள் மற்றும் உத்திகளை நிறுவுதல். இரண்டாவது திட்டம் மேம்படுத்தல் நடவடிக்கைகள் மற்றும் வழிகாட்டுதல்களை செயல்படுத்துவதை ஆதரிக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது.(05)*

# சட்டவிரோதப் பொருள்களுடன் இந்தியர் உட்பட 6 பேர் கைது

சட்டவிரோதமாகக் கொண்டுவரப்பட்ட 03 கோடி ரூபா பெறுமதியான பொருள்களுடன் இந்திய பிரஜை உட்பட 06 பேர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகளால் புதன்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு13, கொழும்பு15, கொழும்புசெட்டியார்தெரு, ஹற்றன், கொட்டகலை மற்றும் வத்தளை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்களும் இந்திய பிரஜை ஒருவருமே கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் புதன்கிழமை அதிகாலை 4.30 மணியளவில் இந்தியாவிலிருந்து இரு வெளவேறு விமானங்களில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர். இதன்போது, விமான நிலைய அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட சோதனையில், சந்தேகநபர்கள்கொண்டுவந்தபயணப்பொதிகளிலிருந்து 159 விஸ்கி போத்தல்கள், சொக்கலட் வகைகள், 05 கிலோ கிராம் ஏலக்காய், நகைகள், கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் ஆடை வகைகள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன. இதனையடுத்து, கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் மேலதிக விசாரணைகளுக்காக கட்டுநாயக்க விமான நிலைய சுங்க அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.(05)

# 38 நாடுகளுக்கு விசா சலுகை எங்களுக்கு இல்லையா?

## பாகிஸ்தான் போர்க்கொடி

இலங்கைக்கு விஜயம் மேற் கொள்ளும் தனது பிரஜைகளிற்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் குறித்து பாகிஸ்தான் சீற்றமடைந்துள்ளது .

இலங்கை அரசாங்கம் 38 நாடுகளின் பிரஜைகள் விசா இல்லாமல் இலங்கைக்கு பயணம் மேற்கொள்ளலாம் என அறிவித்துள்ளது.

எனினும்இந்தபட்டியலில்தனது நாடு இடம்பெறாதமை குறித்து பாகிஸ்தான் சீற்றமடைந்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

பாகிஸ்தானிற்கான இலங்கை தூதுவர்ரவீந்திரவிஜயகுணவர்த்தன ,இதனை வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியின் கவனத்திற்கு கொண்டுவந்துள்ளார் என பாகிஸ்தானையும் இந்த பட்டியலில் இணைத்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொண்டுள்ளார் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

பாகிஸ்தான் பிரஜைகளிற்கான விசா வழங்கும் நடைமுறை குறித்து அதிருப்தி வெளியிட்டுள்ள இலங்கைக்கான பாகிஸ்தான் தூதுவர் ஹி;மஜர் ஜெனரல் உல் அஜீஸ் இந்தியா உட்பட ஏனைய நாடுகளுடன்ஒப்பிடுகையில்இதனை மாற்றாந்தாய் மனப்பான்மை என வர்ணித்துள்ளார்.

பாகிஸ்தான் பிரஜைகள் இலங்கைக்கு சுமுகமான விதத்தில் பயணம் செய்வதை உறுதி செய்வதற்காக தற்போதைய நடைமுறையை உடனடியாக மாற்றவேண்டும் என அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

(05)

# சமுர்த்தி முகாமையாளர்குழு கடமை நேரத்தில் அரசியல் கூட்டத்தில் கலந்துகொண்ட சம்பவம்

## விசாரணைகள் தொடக்கம்

கண்டி மாவட்ட சமுர்த்தி முகாமையாளர்கள் குழுவொன்றுகடமைநேரத்தில்அரசியல்கூட்டமொன்றில் கலந்துகொண்ட சம்பவம் தொடர்பில் கண்டி தேர்தல் அலுவலகம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

சில சமுர்த்தி முகாமையாளர்கள் விவசாயக் குழு, கடன் விசாரணை, முதலீட்டு நடவடிக்கைகள் தொடர்பான விசாரணை போன்ற விடயாங்கங்களுக்கு வெளியேறும் ஆவணங்களில் குறிப்பிட்டு உரிய கூட்டத்திற்குச் சென்றுள்ளதாக கண்டி தேர்தல் அலுவலகம் தெரிவித்துள்ளது.

கூட்டத்தில் கலந்துகொண்ட சில சமுர்த்தி முகாமையாளர்கள் தேர்தல் கடமைகளுக்கு விண்ணப்பித்துள்ளதாகவும் தெரிவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் சமுர்த்தி பணிப்பாளர் நாயகத்திற்கு அறிவித்து அறிக்கையை பெற்றுக்கொள்ள கண்டி தேர்தல் அலுவலகம் புதன்கிழமை நடவடிக்கை எடுத்துள்ளது.

கண்டி வெல்ஸ்பார்க் பகுதியில் உள்ள ஹோட்டல் ஒன்றில் இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

(05)

காலைக்கதிர் Kalaikkathir

# பிரிட்டனில் ஆர்ப்பாட்டத்தில் புலிக்கொடி : எதிர்ப்பை வெளியிட்டது இலங்கை அரசு



இங்கிலாந்தின் ஓவல்மைதானத்திற்கு வெளியே தமிழ் புலம்பெயர் செயற்பாட்டாளர்கள் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் கொடியுடன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டமை குறித்து இலங்கை அரசாங்கம் தனது எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

இங்கிலாந்து இலங்கை அணிகளிற்கு இடையிலான மூன்றாவது டெஸ்ட் ஓவல்மைதானத்தில் இடம்பெற்றவேளை 9 ஆம் திகதி புலம்பெயர் தமிழ் செயற்பாட்டாளர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈ:டுபட்டனர்.

அவர்கள் இலங்கை அரசாங்கத்தின் மனித உரிமை மீறல்களிற்காக இலங்கையின் கிரிக்கெட் அணியை சர்வதேச கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை தடை செய்யவேண்டும் என வேண்டுகோள் விடுத்தனர்.

அவர்கள் விடுதலைப்புலிகள் அமைப்பின் கொடி போன்றவற்றுடன் காணப்பட்டனர்.

இந்தவிடயத்தைபிரிட்டனின்உள்துறைஅமைச்சின் கவனத்திற்கு கொண்டுவந்துள்ளதாக பிரிட்டனிற்கான இலங்கை தூதுவர் ரோகிதபோகொல்லாஹம தெரிவித்துள்ளார்.(05)

# உலக தற்கொலைத் தடுப்புத் தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் நடைபவனி



ஸ்ரீலங்கா சுமித்ரயோ யாழ் கிளை ஏற்பாட்டில் உலக தற்கொலை தடுப்பு தினத்தை முன்னிட்டு புதன்கிழமை மாலை 3.30 மணிக்கு தற்கொலை தடுப்பு சுலோகங்களை தாங்கியவாறு விழிப்புணர்வு நடைபவனி இடம்பெற்றது.

இந்நடைபவனி வீரசிங்கம் மண்டபத்தில் இருந்து கே.கே.எஸ் வீதி வழியாக சத்திரச் சந்தியை அடைந்து, அங்கிருந்து ஆஸ்பத்திரி வீதி வழியாக யாழ். பஸ் நிலைய முன்றிலை சென்றடைந்து. பின்னர் அங்கு கவனவீர்ப்பு போராட்டம் நடைபெற்றது.(05)









# மகாகவி பாரதியார் வீதி வட்டுக்கோட்டையில் திறப்பு

மகாகவி சுப்ரமணிய பாரதியாரின் நினைவு தினமான புதன்கிழமைவட்டுக்கோட்டையில்பாரதிவீதிதிறந்துவைக்கப்பட்டது.

வட்டுக்கோட்டைதென்மேற்குபகுதியில்இவ்வீதிஅமைந்துள்ளது.

விருந்தினர்கள் மங்கல இசை வாத்தியங்கள் முழங்க அழைத்துவரப்பட்டு, மங்கல விளக்கேற்றலுடன் வீதி திறப்பு நிகழ்வு ஆரம்பமானது.

அடுத்து, விருந்தினர்களது உரைகளை தொடர்ந்து வீதி திறக்கப்பட்டது.

யாழ். நண்பர்கள் அமைப்பின் தலைவர் கலாநிதி சிதம்பரமோகனின் தலைமையில் நடைபெற்ற இந்த வீதி திறப்பு நிகழ்வில் மறவன்புலவு சச்சிதானந்தம் பிரதம அதிதியாக கலந்துகொண்டார்.

அத்துடன் மதகுருமார், வலி.மேற்கு பிரதேச செயலாளர் கவிதா உதயகுமார், வலி.மேற்கு பிரதேச சபை செயலாளர் சண்முகராஜா பாலரூபன், கிராம சேவையாளர் சிவபாலன் சிவகுமார், பேராசிரியர் பொன் பாலசுந்தரம்பிள்ளை, கலாநிதி கந்தையா சிவராஜா, டாக்டர் எம்.பி.நடராஜா, வைத்தியகூரி செ.பரமசிவம்பிள்ளை, கா.கோபாலகிருஸ்ணன் மற்றும் பொதுமக்கள் என பலர் கலந்துகொண்டனர்.

(05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 13.09.2024இல் வெளியிடப்பெற்றது